DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 3 of 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW- 3 (L.W- 3)** |
| **Name** | **:** | **திருமதி. விஜயா** |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**14.08.2023**

A1, A2, A3 Present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மஞ்சனக்கோரையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்களது பக்கத்து வீட்டுக்காரர்கள். அசா1, அசா2 ஆகியோரை எனக்கு தெரியும். சாட்சிகள் ராம்குமார், நாகராஜ், சாந்தகுமார், ராமச்சந்திரன். பிரபாகரன் ஆகியோர்களை தெரியாது. சுமார் 6 வருடத்திற்கு முன் ஒருநாள் தேதி, மாதம் ஞாபகம் இல்லை, நாங்கள் காலை 6 மணிக்கு எங்களது மஞ்சனக்கோரை கருணாநிதி காலனியில் இருந்தபோது எங்கள் பக்கத்து வீட்டில் இருக்கும் ரங்கசாமி வீட்டில் இருந்து சத்தம் கேட்டது. நாங்கள் வேலைக்கு போய்விட்டு வந்தபோது சண்டை நடந்ததாக சொன்னார்கள். சண்டையை நான் நேரில் பார்க்கவில்லை. நாங்கள் காலை 6.30 மணிக்கு

வேலைக்கு போய்விட்டு மதியம் 3 மணிக்கு வீட்டிற்கு வருவோம்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பு அனுமதியுடன் குறுக்கு விசாரணை**

என்னை போலிசார் விசாரித்தபோது நான் ரங்கசாமி வீட்டிற்கு பக்கத்தில் 30 ஆண்டுகள் குடியிருந்து வருவதாகவும், ரங்கசாமிக்கும் அவருடைய மருமகன் பால்துரைக்கும் பிரச்சனை இருந்தது வந்ததாக கூறினேன் என்றால் ஆம். அதற்காகத்தான் அவர்கள் சத்தம்போட்டு கொண்டு இருந்தார்கள். 03.10.2017 அன்று காலை 6 மணிக்கு ரங்கசாமிக்கும் அவரது மருமகன் பால்துரைக்கும் இடையே நடந்த பிரச்சனை காரணமாக ரங்கசாமியும், அவரது மகன் ஹாரிசும் பால்துரையை பார்த்து எதற்காக செட் அடித்தாய் என்று தகராறு செய்தார் என்றும் உடனே நீ உயிரோடு இருந்தால்தானே செட் போடுவாய் என்று ரங்கசாமி கோடாரி வைத்து பால்துரையின் தலை மற்றும் வலது கையில் வெட்டியதாகவும் ரங்கசாமி மகன் கையில் வைத்திருநத கத்தியால் தலையில் வெட்டியதாகவும் மனைவி சத்தம் போட்டதால் கனகராஜ் மற்றும் அவரது மகன் சம்பவ இடம் வந்ததாகவும் அப்போது கனகராஜ் மகன் நாகராஜ் இரும்பு கம்பியால் பால்துரையை அடித்தாகவும், அதை நான் பார்த்ததாகவும், பின்பு 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை

**மறு விசாரணை**

இல்லை

Sd/. Thiru. A. Abdul Kadhar,
District Judge, Udhagamandalam